**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

**திருச்செங்கோடு**

**முன்னிலை:– திரு.** P. **ரங்கராஜ்,** B.A.B.L.,

**நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.**205/2025

CNR.No. TNNM08-000904-2025

2026**– ம் ஆண்டு ஜுன் திங்கள்** 29**–ம் நாள் திங்கட்கிழமை**

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>மல்லசமுத்திரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.130/2024 |
| குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் முகவரி | பாலசுப்ரமணி (வயது 53)<br>த/பெ. ஆறுமுகம்<br>3/127, கோ–ஆபரேடிவ் பேங்க் எதிரில், வெள்ளாளபுரம், எடப்பாடி, சேலம் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | சட்டப் பிரிவுகள் 281, 106(1) BNS |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 16.08.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 27.05.2025 (Bailed by police) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 09.07.2025 |
| 263 BNSS கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | 04.09.2025 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 17.06.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 24.06.2026 |

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:16:43 +0530

| | |
|---|---|
| பிரிவு 351(1)(ஆ) BNSS இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.06.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | Nil |
| முடிவு | முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி பிரிவுகள் 281, 106(1) BNS –ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 271(1) BNSS–ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கானது 10.07.2025- ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் அ. உதயபானு, B.com.,B.L., நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கவின்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

01) கடந்த 16.08.2024 - ம் தேதி 19.45 மணிக்கு மல்லசமுத்திரம் காவல் நிலைய சரகம் மல்லசமுத்திரம் to திருச்செங்கோடு ரோட்டில் மல்லசமுத்திரம் TCMS எதிரில் இவ்வழக்கின் சாட்சி–1–ன் அப்பா கந்தசாமி என்பவர் தனது சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை கடந்த

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:16:50 +0530

போது திருச்செங்கோட்டிலிருந்து மல்லசமுத்திரம் நோக்கிவந்த TN 52 K 6970 என்ற பதிவெண்கொண்ட Passion Pro இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான எதிரி மேற்படி வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று சாட்சி–1–ன் அப்பா ஓட்டிவந்த சைக்கிளின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தில் சாட்சி–1–ன் அப்பா கந்தசாமி என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தியதாகவும், மேற்படி குற்றத்திற்காக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 281, 106(1) BNS – ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என மல்லசமுத்திரம் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

03) வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு படித்து பார்க்க போதுமான அவகாசம் வழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து வினவ போதுமான முகாந்திரங்கள் உள்ளன என்று இந்நீதிமன்றம் கருதியதால் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 281, 106(1) BNS - ன் கீழ் குற்றம் பற்றி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, இந்த வழக்கில் அரசு தரப்பை மெய்ப்பிக்க வேண்டி சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்.**

04) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1/சதீஷ் கொடுத்த புகாரினை பரிசீலனை செய்தபோது, புகாரில், தனது அப்பா கந்தசாமி மல்லசமுத்திரம் சூரியகவுண்டம்பாளையத்தில் உள்ள TCMS –ல் சுமை தூக்கும் வேலைக்கு

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:16:59 +0530

செல்வதாகவும், கடந்த 16.08.2024–ம் தேதி இரவு சுமார் 7.45 மணிக்கு வேலை முடித்து வீட்டிற்கு வருவதற்காக மல்லசமுத்திரம் TCMS எதிரே வடக்கு தெற்காக செல்லும் சாலையை அவருக்கு சொந்தமான சைக்கிளில் கடக்கும்போது திருச்செங்கோட்டிலிருந்து மல்லசமுத்திரம் நோக்கி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 52 K 6970 (Honda Shine) என்ற எண்கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து தனது அப்பாவின் சைக்கிளின் மீது மோதிவிட்டதாக தனது மாமா ராஜ்குமார் போன் மூலம் தகவல் சொன்னதாகவும், தான் உடனே அங்கு வந்து பார்த்தபோது தனது அப்பாவிற்கு தலையில் பலத்த அடிபட்டு சுயநினைவின்றி கிடந்தார் என்றும், பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த அந்த வாகனத்தின் ஓட்டுநர் பெயர் பாலசுப்ரமணி என்பவர் வெள்ளாளபுரம் கொங்கணாபுரத்தை சேர்ந்தவர் என்றும், அவருக்கும் முகத்தில் லேசான காயம் ஏற்பட்டிருந்ததாகவும், தான் உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் தனது அப்பாவை திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்ததாகவும், அங்கு இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் பாலசுப்ரமணியும் அட்மிட் ஆனதாகவும், பின்னர் 16.08.2024-ம் தேதி இரவு சுமார் 9.00 மணிக்கு தனது அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், தனது அப்பாவின் உடலை சவகிடங்கில் வைத்துவிட்டு 17.08.2024-ம் தேதி மல்லசமுத்திரம் காவல் நிலையம் சென்று தன் அப்பா மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்வந்தவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.சா.1 மல்லசமுத்திரம் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின்பேரில் காவல் உதவி ஆய்வாளர் ரஞ்சித்குமார் என்பவர் வழக்கு பதிவு செய்து நிலைய குற்றஎண்.130/2024, ச.பி.281, 106(1) BNS ஆக முதல் தகவல் அறிக்கை/**அ.சா.ஆ.3** பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார்வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:05 +0530

05) பின்னர் வழக்கு கோப்புகளை காவல் ஆய்வாளர் திரு.சிவகுமார் (பொறுப்பு) அவர்கள் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.08.2024 – ம் தேதி காலை 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் சபாபதி/அ.சா.4, முத்துசாமி/பட்டியல் சாட்சி–7 ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர்/**அ.சா.ஆ.2** மற்றும் மாதிரி வரைபடம்/**அ.சா.ஆ.4** தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் சதீஷ்/அ.சா.1, ராஜ்குமார்/அ.சா.2, கார்த்திக்/அ.சா.3, சங்கர்/பட்டியல் சாட்சி–4 மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இறந்துபோன கந்தசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை/**அ.சா.ஆ.5** தயார் செய்துள்ளார்.

06) பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 52 K 6970 என்ற பதிவெண்கொண்ட Honda Shine வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்கு வேண்டி வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன கந்தசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய தலைமைக்காவலர் திரு.நித்யானந்தன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பிவைத்துள்ளார். பின்னர் அ.சா.5 இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரியை கைதுசெய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் மேற்படி வாகனத்தை ஆய்வுசெய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி வாகனத்தின் ஆய்வறிக்கை/**அ.சா.ஆ.6** பெற்றுள்ளார்.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:12 +0530

07) பின்னர் பிரேத விசாரணை செய்து சான்று வழங்கிய மருத்துவர் கோகுல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத பரிசோதனை அறிக்கை/**அ.சா.ஆ.7** பெற்றுள்ளார். இவ்வழக்கின் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்த தலைமைக்காவலர் திரு.நித்யானந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

08) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்று பொருட்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

09) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியை பிரிவு 351(1)(ஆ) BNSS – ன்படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதில் கூறியுள்ளார்.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

11) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:17 +0530

**தீர்வு**

12) எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான பிரிவுகள் 281, 106(1) BNS –ன் கீழான குற்றத்தை நிரூபிக்க வேண்டுமென்றால், எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தி, அந்த விபத்தின் மூலம் மனித உயிருக்கு இறப்பை விளைவித்திருக்க வேண்டும். இவ்வழக்கில் கந்தசாமி என்பவர் விபத்தின் காரணமாக இறந்துள்ளது தெரிய வருகிறது. இருப்பினும் அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான பாலசுப்ரமணி என்பவர் விபத்து சமயத்தில் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று கந்தசாமி ஓட்டிவந்த சைக்கிளின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினாரா என்பதை பொறுத்து கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களை வைத்து தான் முடிவு செய்ய இயலும்.

13) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1/சதீஷ் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 16.08.2024–ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் தனது அப்பா TCMS–ல் வேலை முடித்துக்கொண்டு அவரது சைக்கிளில் வீட்டிற்கு வருவதற்காக சேலம் ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது திருச்செங்கோடு பக்கமிருந்து வந்த பைக் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தனது மாமா ராஜ்குமார் தனக்கு போன்மூலம் தகவல் கூறினார் என்றும், தான் தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது அவர் மயக்க நிலையில் இருந்ததாகவும், பின்னர் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், அவர் சிகிச்சை பலனளிக்காமல் அன்றையதினமே இறந்துவிட்டார் என்றும், இதுசம்பந்தமாக காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14) மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், யாருடைய அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:24 +0530

கண்ணுற்ற சாட்சி அல்ல. அவர் சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியின் பெயர் மற்றும் மற்ற விவரங்களை யாரிடம் கேட்டு தெரிந்துகொண்டார் குறிப்பிட்டு எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே உண்மையில் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பவம் நடைபெற்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. எனவே அ.சா.1ன் சாட்சியத்தை கொண்டு இவ்விபத்திற்கு எதிரி தான் காரணம் என முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) இவ்வழக்கில் இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று திடீரென ஒரு சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது தனது மாமா மீது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்ததாகவும், சம்பவத்தை தனக்கு நேரடியாக தெரியாது என்றும், விபத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.2–ன் சாட்சியத்திலிருந்து கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதும் சத்தம்கேட்டு வெளியில் சென்று பார்த்துள்ளதும் தெரியவருகிறது. எனவே அ.சா.2–ன் சாட்சியம் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்ய பயன்படுவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.3 தனது சாட்சியத்தில் இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை. சத்தம் கேட்டு திரும்பி பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.3–ன் சாட்சியத்திலிருந்து கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதும் சத்தம்கேட்டு திரும்பி பார்த்துள்ளதும் தெரியவருகிறது. மேலும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2–ம், அ.சா.3–ம்

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:30 +0530

எதிரியை அடையாளப்படுத்தியோ எதிரியை சம்பவ இடத்தில் வைத்து பார்த்ததாகவோ கூட எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அ.சா.3–ன் சாட்சியமும் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்ய பயன்படுவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந்த 17.08.2024–ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் TCMS முன்பு நடந்த விபத்து சம்மந்தமாக போலீசார் வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக தானும், முத்துசாமி என்பவரும் கையெழுத்து செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4–ன் சாட்சியம் சம்பவ இடத்தில் போலீசார் வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார்செய்தது பற்றி விளக்குவதாக உள்ளதே தவிர எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்ய பயன்படுவதாக இல்லையென இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) மேலும், இவ்வழக்கின் அ.சா.5/திருமதி.ராதா தனது சாட்சியத்தில், கடந்த 16.08.2024–ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் ரஞ்சித்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பின்னர் இவ்விபத்தில் இறந்துபோன கந்தசாமி என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தது பற்றியும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்து, பின்னர் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது பற்றியும், இவ்வழக்கில் இறந்துபோனவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வழக்கு புலன் விசாரணையை

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:35 +0530

முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 தனது முதல் விசாரணையில் 16.08.2024–ம் தேதி அ.சா.1 நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் குறுக்குவிசாரணையில் 17.08.2024–ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது முரண்படாக உள்ளது. அ.சா.ஆ–1 புகாரிலும் 17.08.2024–ம் தேதி தான் புகார் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே உண்மையில் 16.08.2024–ம் தேதி புகார் பெறப்பட்டதா அல்லது 17.08.2024–ம் தேதி புகார் பெறப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது. மேலும் அ.சா.5 தனது குறுக்குவிசாரணையில் இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகள் இறந்துபோன கந்தசாமியின் ஊரை சேர்ந்தவர்கள் என்றும், சம்பவ இடத்தின் அருகில் உள்ள கடையில் இருந்த நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரணைசெய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இவ்வழக்கில் இவ்வழக்கு விபத்தை கண்ணுற்றதாக தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யப்படவில்லை. மேலும், அ.சா.5–ன் சாட்சியம் அவர் மேற்கொண்ட புலன் விசாரணையை குறித்து விளக்குவதாக மட்டுமே உள்ளதே தவிர, எதிரியை குற்றச்சம்பவத்தோடு தொடர்புபடுத்தும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அ.சா.5–ன் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரியை பிரிவுகள் 281, 106(1) BNS–ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்க முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19) எனவே உண்மையில் சம்பவத்தின்போது மேற்படி இருசக்கர வாகனத்தை எதிரி தான் இயக்கியதாக தெளிவுபடுத்த இவ்வழக்கில் இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்கில் இவ்வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லாத நிலையிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:42 +0530

அனைவரும் இறந்துபோனவரின் ஊரைச்சேர்ந்தவர்கள் என்ற நிலையிலும், சம்பவ இடத்தில் உள்ள வேறு தனி நபர்களை சாட்சியாக விசாரணை செய்யப்படாத நிலையிலும், மேலும் விபத்தில் இறந்துபோன நபர் சைக்கிளில் ரோட்டை கடக்கும்போது விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது குறித்து அரசுதரப்பில் தெளிவுபடுத்தவில்லை.

20) அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான பாலசுப்ரமணி என்பவர் விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டிவந்து, கந்தசாமி என்பவர் ஓட்டிவந்த சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, கந்தசாமி என்பவருக்கு இறப்பு ஏற்படுத்தியதாக போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21) முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி பிரிவுகள் 281, 106(1) BNS –ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 271(1) BNSS–ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22) எதிரி இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 29–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:48 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

**அரசு தரப்பு சாட்சிகள்.–**

| Prosecution Witness No | Name of Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 /LW1 | திரு.சதீஷ் | புகார்தாரர் |
| அ.சா.2/LW2 | திரு.ராஜ்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3/LW3 | திரு.கார்த்திக் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4/LW6 | திரு.சபாபதி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5/LW13 | திருமதி.ராதா | காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.–**

| Exhibit No | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 – 17.06.2026 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர் | அ.சா.4 – 17.06.2026 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 – 24.06.2026 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.5 – 24.06.2026 |
| அ.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.5 – 24.06.2026 |
| அ.சா.ஆ.6 | மோட்டார் வாகன அறிக்கை TN 52 K 6970 | அ.சா.5 – 24.06.2026 |
| அ.சா.ஆ.7 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.5 – 24.06.2026 |

அரசு தரப்பு சான்று பொருள்.– இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சி, சான்றாவணம்.– இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:17:55 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

குறிப்பு.–

1. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையிலிருந்தார்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE**

CASE SUMMARY- CC.No.205/2025

<table>
<tr><th>S.No.</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1.</td><td>Period of Remand of the Accused</td><td>Bailed by police (27.05.2025)</td></tr>
<tr><td>2.</td><td>The Date of Filing of the Complaint/Final Report of the Court</td><td>09.07.2025</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Committal of the Case to the Court of Session</td><td>Nil</td></tr>
<tr><td>4.</td><td>The Date of Questioning of the Accused under sections 263 of BNSS, as the case maybe</td><td>04.09.2025</td></tr>
<tr><td>5.</td><td>Filing of Miscellaneous Petitions an their results on challenge before superior Court. Except routine petitions like petitions Under Section 355 of the BNSS</td><td>Nil</td></tr>
<tr><td>6.</td><td>Date of examination in-chief and cross-examination of a Witness</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW.1</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>PW.2</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>PW.3</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>PW.4</td><td>17.06.2026</td><td>17.06.2026</td></tr>
<tr><td>PW.5</td><td>24.06.2026</td><td></td></tr>
</table></td></tr>
<tr><td>7.</td><td>Date of examination of the Accused under section 351(1)(b) of the BNSS</td><td>25.06.2026</td></tr>
<tr><td>8.</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case maybe</td><td>Nil</td></tr>
<tr><td>9.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.29 18:18:10 +0530

Judicial Magistrate,
Tiruchengode.